# இயல் 1 துணைப்பாடம் வளரும் செல்வம்

'வளரும் செல்வம்' உரையாடலைக் கட்டுரை வடிவில் கருப்பொருள் குன்றாமல் சுருக்கி எழுதுக.

முன்னுரை:

சொற்கள் வரலாற்றைப் பேசுபவை. ஒவ்வொரு சொல்லிலும் இனத்தின், மொழியின் வரலாறு இருக்கிறது. தமிழ்ச் சொற்கள் வழியாகத் தமிழர் நாகரிகத்தையும் வாழ்வையும் அறிய முடியும். அதுபோலத் தமிழில் வழங்கும் பிறமொழிச் சொற்களும் அவை சார்ந்த இனத்தின் மொழியின் வரலாற்றைக் காட்டுகின்றன. சொற்கள் புலப்படுத்தும் வரலாறு, பண்பாடு ஆகியவற்றைக் கூறுவதே இதன் நோக்கம்.

தமிழெண்கள்:

கணிதத்தில் ஒன்று, பத்து, ஆயிரம் ஆகிய எண்ணிக்கையிலான தமிழ்ச் சொற்கள் தமக்குத் தெரியும். ஆனால் 1/320, 1/ 160 ஆகிய எண்ணிக்கைகளுக்கான சொற்களைக் கால மாற்றத்தில் கைவிட்டோம். நாம் நினைத்தால் அவற்றை மீட்டெடுக்கலாம்.

கலைச் சொற்கள் :

தாய் மொழி சார்ந்த சொற்களின் எண்ணிக்கை மிகுதியாகும். எனவேதான் நம் வாழ்க்கையில் இடம்பெறும் அறிவியல் கருத்துகளுக்கான கலைச் சொற்களை எல்லாம் நம் மொழியிலும் உருவாக்க வேண்டிய தேவை ஏற்படுகிறது. அத்தகைய கலைச் சொற்களை ஒலிபெயர்ப்புச் செய்தோ, மொழிபெயர்ப்புச் செய்தோ உருவாக்கலாம்.

கடல் துறை :

உலகில் தொன்மை மொழியாகவும் செவ்வியல் மொழியாகவும் திகழ்வது கிரேக்க மொழியாகும். இம்மொழியின் கடல் சார்ந்த சொற்களில் எறிதிரை (எறுதிரான்), கலன் (கலயுகோய்), நீர் (நீரியோஸ்), (நீரிய), நாவாய் (நாயு), தோணி (தோணீஸ்) போன்ற தமிழ்ச் சொற்கள் இடம் பெற்றுள்ளன. இது போலப் பல்வேறு துறை சார்ந்த தமிழ்ச் சொற்களும் வேற்று மொழிகளுக்குச் சென்றுள்ளன.

கவிதைத் தமிழ் :

கவிதை சார்ந்த சொற்களைத் தமிழிலும் கிரேக்க மொழியிலும் ஒப்பாகக் காண முடியும்.

இன்றியமையாத பணி :

வளர்ந்து கொண்டிருக்கும் அறிவியல் துறைக் கலைச் சொற்களை உடனுக்குடன் தமிழ் மொழியில் மொழி பெயர்த்தல் வேண்டும். தமிழில் உள்ள தத்துவம், அரசியல் ஆகிய துறைகளின் சிந்தனைகளை எல்லாம் பிறமொழிகளுக்குக் கொண்டு செல்ல வேண்டும். இதுவே நம் தமிழ்மொழி உயிர்த்திருக்க நாம் செய்ய வேண்டிய இன்றியமையாத பணியாகும்.

முடிவுரை:

வளர்ந்து கொண்டிருக்கும் அறிவியல் துறைக் கலைச் சொற்களை உடனுக்குடன் தமிழ் மொழியில் மொழி பெயர்த்து அத்துறைகளை மேலும் வளர்க்க வேண்டும். பிறமொழியிலுள்ள தத்துவம், அரசியல், மருத்துவம், பொறியியல், கணினி, விண்வெளி போன்ற பிற துறைகளின் பதிவுகள் எல்லாம் உடனுக்குடன் நம் மொழிக்குக் கொண்டு வரப்பட வேண்டும். நம் மொழியில் புதிய, புதிய சொல்வளம் பெருக வேண்டும்